# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

தேதி: 12.03.2026

OS. No.50/2019

**வழக்கு சாட்சி DW.1 – ஹரி பிரசாத், த/பெ. சத்தியமூர்த்தி**

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

வாதி முருகானந்தம் எனது பெரியப்பா ஆவார் . வீடு சரிபாதி பங்கு வேண்டும் என்றுச் சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார் . எனது அப்பாவும் , பெரியப்பாவும் தான் ஆவணம் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான் . தாவா சொத்து தொடர்புடைய வீட்டில் நான்தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து தொடர்புடைய வீடு எனது தாத்தா தண்டாயுதபாணி செட்டியார் பெயரில் இருந்துவந்தது . எனது அப்பாவும், பெரியப்பாவும் ஏற்படுத்திக்கொண்ட பாகவஸ்தி ஆவணம் குறித்து எனக்குத் தெரியுமா என்றால் தெரியும் , அந்த ஆவணமானது 1997 ல் எழுதிக்கொண்டார்கள், தேதி குறிப்பிட்டு நினைவில்லை. வா.சா.ஆ.1 பாகவஸ்தி ஆவணத்தின் அடிப்படையில் எந்த பாகம் எங்கள் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது என்றால் வீட்டின் கீழ்போர்சனானது ஒதுக்கப்பட்டது . வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை . எனது பெரியப்பா முருகானந்தம் தற்போது சென்னையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான் . வா.சா.ஆ.1 பத்திரத்தின் அடிப்படையில் அவருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை கொடுக்கவில்லை என்றுச் சொல்லிதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

எனது அப்பாவிற்கும் , பெரியப்பாவிற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட பாகவஸ்தி விபரங்கள் தெரியாமல் இந்த வழக்கை எதிர்வாதம் செய்து வாதியின் உரிமையை தடுத்து

வருகிறேன் என்றால் சரிதான் (சாட்சியிடம் கேள்வியை நன்கு படித்துப்பார்த்து பதில் அளிக்குமாறு கேட்டு அவர் சரிதான் என்று பதிலளித்தார்). தண்டாயுதபாணி எனது தாத்தா ஆவார் . வாதி தாக்கல் செய்த வாதுரையில் 6 வது பத்தியில் " தாவா சொத்திலும், தாயின் நகையிலும், தந்தையின் ரொக்கத்திலும் " வாதிக்கு சேர வேண்டிய பங்கினை கொடுக்கும்படி வழக்கறிஞர் அறிவிப்பு எனது அப்பாவிற்கு அனுப்பிய விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். 23.03.2019 ம் தேதி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு எனது பெரியப்பா முருகானந்தம், எனக்கு அனுப்பி வைத்தார் என்றால் சரிதான் . வா.சா.ஆ.1 பாகப்பிரிவினையின் அடிப்படையில் குடும்பச் சொத்தானது A, B, C என சொத்துக்களாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எனது தாத்தா தண்டாயுதபாணி 29.05.2005 ல் காலமான பின்பும், எனது பாட்டி காமுத்தாயம்மாள் 07.11.2017 ல் காலமான பின்பும் எனது அப்பாவும் , வாதியும் 3 வது இலக்கச் சொத்தை சரிபாகமாக பிரித்து பணத்தை பங்கீட்டுக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. எனது பெரியப்பா அவரது பங்குகள் அனைத்தையும் விற்றுவிட்டார். வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் அவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தை வாதி விற்றுவிட்டார் என்றால் சரிதான் . வாதி அவரது பங்கை விற்றுவிட்டதாக காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தை எனது அப்பா வாடகைக்கு விட்டிருந்தார் என்றால் சரியல்ல. வாதி தரப்பில் தாக்கல் செய்த வா .சா.ஆ.3 சட்ட அறிவிப்பில் எனது தந்தையின் வழக்கறிஞர் C செட்யூல் சொத்தான காமுத்தாய் பாகத்தை பிரித்து தந்துவிடுவதாகவும் , காமுத்தாயிக்கு செலவு செய்த தொகையினை கொடுத்துவிட்டால் பாகத்தை கொடுத்துவிடுவதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான் . பல தவணைகளில் எனது தந்தைக்கு வங்கி கணக்கு பரிவர்த்தனை மூலம் எனது தாத்தா, பாட்டி பராமரிப்பு செலவிற்கு வாதி பணம்

அனுப்பியுள்ளார் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது . எனது அப்பா உயிருடன்தான் உள்ளார் . எனது அப்பாக்கு சொந்தமான சொத்து தொடர்பாக வழக்கு நடத்த எனது அப்பாவிடம் அதிகாரம் பெற்றது தொடர்புடைய ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது அப்பா சார்பாக சாட்சியம் அளிக்க ஏதேனும் நீதிமன்றத்தில் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது )**

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.03.12 18:24:38 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.